என்று பொதுவாகச் சொல்லுவது இப்படிப்பட்ட பிரச்சினையில் சரியானது அல்ல. இரண்டு மூன்று ஆண்டுக் காலமாக மக்கள் தொகை மிகுதிப்படுவதை மனத்தில் கொண்டு ஆலோசிக்கப்பட்டுள்ளது. அதற்கேற்றபடி தண்ணீர்த் திட்டத்தை விரிவுபடுத்தும் திட்டத்திற்கு நிதிநிலை வசதி கிடைத்தவுடன் நிறைவேற்றப்படும்.

ஈழுவர் வகுப்பு மாணவர்களுக்கு படிப்புதவித் தொகை

* 262 வினா.—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு பின் தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள எழுவர் (ஈழுவர்) என்ற வகுப்பினர்களுக்கு பின்தங்கிய வகுப்பினர் என்று ஸ்காலர்ஷிப் பணம் கொடுக்கப்பட்டு வந்தது. இந்தக் கல்வி ஆண்டில் அவர்கள் பின்தங்கிய வகுப்பினர் பட்டியலில் வருவதில்லை என்று ஸ்காலர்ஷிப் பணம் கொடுப்பது நிறுத்தப்பட்டதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: ஆம்.

(இ) பின்தங்கிய வகுப்பினர் நலக்குழு பிற்பட்ட வகுப்பினர் பட்டியலினைத் திருத்தி அமைத்ததுக்கான பரிந்துரையில், 'எழவன்' என்ற சொல் கேரளாவிலுள்ள கள் இறக்குவோரைக் குறிப்பிடுகிற தாகையால், அதனை பிற்பட்ட வகுப்பினர் பட்டியலிலிருந்து நீக்கி விடலாமென பரிந்துரைத்தது. அரசு இதனை ஏற்றது. இருப்பினும், ஏற்கனவே உதவி தொகைப் பெற்று பயின்று வந்த மாணவர்களுக்குத் தங்கள் பயிற்சி ஒரு கட்டத்தில் முடியும்வரை (completion of course in one stage) உதவித் தொகை வழங்குமாறு ஆணையிட்டது. இதனால் ஒரு பயிற்சியில் முதன் முதலாகச் சேர்ந்து உதவித் தொகைக்கு விண்ணப்பித்து கொள்ளும் மாணவர்களின் கோரிக்கைகளே நிராகரிக்கப்பட்டன. திருநெல்வேலி மாவட்டத்தில் அப்படி நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 51.

1973 நவம்பர் 21]

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : இந்த ஈழவ சமுதாயம் பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கியவர்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? கேரளாவில் இவர்களுக்குப் பின்தங்கிய வகுப்பினருக்கு அளிக்கப்படுகின்ற சலுகைகள் அளிக்கப்படுவதுபோல் இங்கும் அளிப்பதற்கு அரசு மறுபரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : அந்தப் பெயருக்குப் பதிலாக இல்லத்து பிள்ளைமார் என்ற வகுப்பினர் பெயரில் அவர்கள் விண்ணப்பித்தால் அதைப்பற்றிக் கவனிக்கப்படும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஏற்கனவே இந்த ஈழவ இனத்தைச் சார்ந்தவர்கள் திருநெல்வேலியில் இருந்திருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த ஸ்காலர்ஷிப் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கும் அந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். இந்தப் பெயர் மாற்றப்படுகிற காரணத்தால், பாக்வேர்ட் கம்யூனிட்டி கமிஷன் ரிப்போர்ட்டில், அவர்களுடைய லிஸ்டில் இருந்து இது எடுக்கப்பட்டுள்ள காரணத்தினால் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த சலுகைகள் மறுக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பார்க்கும்போது அது மிகவும் வருந்தத்தக்கதாக இருக்கிறது. ஆகவே பெயரை வைத்தோ அல்லது கேரளாவில் கள் இறக்குவோருக்குத்தான் அந்தப் பெயர் உள்ளது என்பதை மனதில் வைக்காமல், இந்த இனத்தைச் சார்ந்தவர்கள் இன்னும் திருநெல்வேலியில் இருக்கிறார்கள் என்பதனாலும் அவர்களுக்கு இந்தச் சலுகைகளைக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : பின்தங்கியவர்களுக்கு சலுகைகள் அளிப்பதில் இந்த அரசு முன்னணியில் இருக்கிறது என்பதை அம்மையார் அவர்கள் உணருவார்கள் என்று கருதுகிறேன். ஆனால் அந்தப் பெயரினால் சில குழப்பங்கள் ஏற்படுகின்றன என்பதால் இல்லத்து பிள்ளைமார் என்ற வகுப்பின் கீழ் விண்ணப்பித்தால் அவர்களுக்குச் சலுகைகள் வழங்கப்படுகின்றன.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : ஈழவர்கள் என்ற வகுப்பினர் பிற்பட்ட இனத்தினர் பட்டியலில் கன்னியாகுமரி ஜில்லாவில் இருக்கிறார்கள். அவர்களுக்கு முன்பு அரசாங்கம் சலுகைகள் கொடுத்து வந்தது. அதை இன்னும் தொடர்ந்து கொடுப்பதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா?

[1973 நவம்பர் 21

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : ஒரு கட்டத்தில் ஆரம்பித்து அது முடியும் நிலையில் இருக்கும் மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் கட்டாயம் அளிக்கப்படும். கன்னியாகுமரி மாவட்டத்தில் இன்றைக்கும் ஈழவர்களைப் பின்தங்கிய மக்களாகக் கருதி தொடர்ந்து சலுகைகள் அளிக்கப்படுகின்றன.

திரு. ஜே. ஜேம்ஸ் : மொழிவழி மாகாணங்கள் அமைப்பதற்கு முன் எந்தெந்தச் சலுகைகள் எந்தெந்த சமுதாயத்தினருக்கு திருவாங்கூர்-கொச்சி ஸ்டேட்டில் வழங்கிக் கொண்டிருந்தார்களோ அந்தச் சலுகைகளை ஸ்டேட் ரீ-ஆர்கனேசேஷன் ஆக்ட்-படி மறுக்கக் கூடாது என்று அந்த ஆக்டில் ஒரு விதி இருக்கிறது. எனவே ஸ்டேட் ரீ-ஆர்கனேசேஷன் ஆக்ட்டுக்கு முன்னால் எந்தெந்தச் சலுகைகளை பிற்பட்ட சமுதாயங்கள் பெற்றுக் கொண்டிருந்தனவோ அந்தச் சமுதாயங்களுக்கு அந்தந்தச் சலுகைகளை இந்த அரசு வழங்குவதற்கு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இப்போதுள்ள பிரச்னை அவர்களுக்கு உதவி அளிப்பதா இல்லையா என்பது மட்டுமல்ல, எந்தப் பெயரால் அவர்கள் அழைக்கப்பட வேண்டும் என்பதுதான் பிரச்னை. எனவே, ஏற்கனவே உதவித் தொகை வழங்கியவர்களுக்கு தொடர்ந்து அளிக்கப்படுகிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : அமைச்சர் அவர்களின் பதிலிலிருந்து இல்லத்து பிள்ளைமார் என்று பெயரை மாற்றி வைத்துக் கொண்டால் இந்த ஸ்காலர்ஷிப்க்கு அவர்கள் எலிஜிபிள் ஆகிவிடுவார்கள். அப்படி இல்லத்து பிள்ளைமார் என்று வைத்துக் கொள்வதற்கு அந்தப் பெயர் அந்த லிஸ்டில் வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : ஆம். முழு விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் தெரிவிக்கப்படும்.

திரு. க. உரொ. எட்மண்ட் : இந்த ஈழவ சமுதாயத்தினருக்குக் கொடுக்கப்பட்டு வந்த சலுகைகள் நிறுத்தப்பட்டதற்குக் காரணம் நம் பின்தங்கியோர் நலக் குழுவின் சிபாரிசின் பேரில் நிறுத்தியிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பின்தங்கியோர் நலக் குழு சில சிபார்சுகளைச் செய்திருக்கிறார்கள். புதிதாக சில சமுதாயங்களை பின்தங்கியோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று சிபார்சு செய்திருக்கிறார்கள். அதை உடனடியாகச் செய்வதற்கு அரசு நடவடிக்கைகள் எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

1973 நவம்பர் 21]

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : பின்தங்கியோர் நலக் குழுவின் பரிந்துரைகள் அத்தனையையும் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்றில்லை. அதில் சிலவற்றை மாற்றவும் கூடும். உறுப்பினர் கருத்தை சமயம் வரும்போது பரிசீலனை செய்ய அரசாங்கம் தயார்.

திரு. சி. ஆறுமுகம் : நம்முடைய எதிர்க் கட்சி அம்மையார் அவர்கள் குறிப்பிட்ட இனத்தினருக்கு கேரளாவில் உள்ளதுபோல் சலுகை தமிழ்நாட்டில் அளிக்கப்படவில்லை என்று கூறினார்கள். கேரளா நாட்டில் ஹரிஜனங்களுக்குச் சலுகைகள் இல்லை என்று சொல்கிறார்களே அது அரசாங்கத்திற்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : அந்த விவரம் எனக்குத் தெரியாது.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : இல்லத்து பிள்ளைமார் என்ற பெயர் பிற்பட்டோர் லிஸ்டில் இல்லாதபோது அவர்கள் இந்தப் பெயரை வைத்து ஸ்காலர்ஷிப்புக்கு விண்ணப்பங்கள் கொடுப்பார் களேயானால் உங்களுடைய டிப்பார்ட்மெண்ட் அதை அவ்வளவு சுலபமாக சாங்க்ஷன் செய்யுமா? இவைகளுக் கெல்லாம் அர சாங்கம் என்ன செய்ய முன்வந்திருக்கிறது?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : அம்மையார் அவர்கள் தெரிவித்தக் கருத்துக்கிணங்க ஏற்கெனவே இந்த உதவித் தொகை இல்லத்துப் பிள்ளைமார்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. ஆனால், இல்லத்துப் பிள்ளைமார் என்ற பெயரில் விண்ணப்பிக்க வேண்டும்.

கள்ளர் சீரமைப்புப் பள்ளி உடற்பயிற்சி ஆசிரியர்கள் சம்பளம்

*** 263 வினா.—திரு. நா. வெ. குருசாமி :** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் ஹையர் கிரேடு உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு மற்ற இலாகாவில் கொடுக்கப்படும் சம்பளம் இன்னும் தரப்படவில்லை என்பது உண்மையா?